# பத்திரிக்கைச் செய்தி

## மீன்பிடி மற்றும் மீன்வளர்ப்பு தொழிலில் புதிய திட்டத்தில் இணைக்க புகார்தாரரிடம் ரூ.31,000/- லஞ்சம் கேட்டு பெற்ற மீன்வளத்துறை ஆய்வாளர் கைது

புகார்தாரர் திரு.கார்த்திக், எண்.77, விநோபா தெரு, பி.மேட்டுப்பாளையம், பவானி தாலுகா, ஈரோடு மாவட்டத்தில் வசித்து வருகிறார். இவர் மீன் பிடி மற்றும் மீன் வளர்ப்பு தொழில் செய்வதற்காக மூன்று ஏக்கர் நிலத்தில் கட்டுமானம் செய்து வருகிறார். இக்கட்டுமானத்திற்காக மத்திய அரசின் பிரதம மந்திரி திட்டத்தின் கீழ் இவருக்கு மானியமாக ரூ.1,20,000/- வங்கி மூலமாக கொடுக்கப்பட்டுள்ளது. திரு.அருள்ராஜ், மீன்வளத்துறை ஆய்வாளர், கோபிசெட்டிபாளையம், ஈரோடு மாவட்டம் அவர்கள் புகார்தாரரின் பெயரை புதிய திட்டத்தில் இணைக்கவேண்டுமெனில் தனக்கு ரூ.31,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டுமென கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஈரோடு பிரிவில் புகார் அளித்தார். இன்று 11.05.2023 திரு.அருள்ராஜ், மீன்வளத்துறை ஆய்வாளர் புகார்தாரரிடம் ஒத்தக்குதிரை பேருந்து நிறுத்தத்திற்கு வருமாறு அழைத்துள்ளார். புகார்தாரர் பேருந்து நிலையம் சென்று திரு.அருள்ராஜை சந்தித்து பின்னர் புகார்தாரர் தன்னுடைய புல்லட்டில் ஓடோன்துறை பேருந்து நிறுத்தத்தில் திரு.அருள்ராஜ், மீன்வளத்துறை ஆய்வாளரை இறக்கிவிட்டுள்ளார், புல்லட்டில் செல்லும் போது புகார்தாரரிடமிருந்து லஞ்சபணம் ரூ.31,000/-யை திரு.அருள்ராஜ் பெற்றுள்ளார். திரு.அருள்ராஜ், மீன்வளத்துறை ஆய்வாளர், லஞ்ச பணம் ரூ.31,000/-யை வைத்திருந்தபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

# PRESS NOTE

## INSPECTOR OF FISHERIES ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE RS.31,000/- FOR INCLUDED IN THE PMMSY SCHEME

The complainant Tr.Karthick, is residing at No.77, Vinobha Street, B.Mettupalayam, Bhavani Taluk, Erode District. The complainant is having about 3 acres of land in which he had constructed fish ponds under PMMSY Scheme. In connection with the construction, the complainant had received subsidy of Rs 1,20,000 prior to ten days through bank (ECS). Tr.Arulraj, Inspector of Fisheries, Gobi Chettipalayam, Erode District demanded Rs 31,000/- as bribe from the complainant and threatens that his name would not be included in the new schemes if the amount was not paid. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Erode detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized. Today 11.05.2023 the complainant was asked to come to Othakuthirai bus stop by the accused. According the complainant met the accused there. The accused asked the complainant to drop him at Odanthurai. The complainant took him in his bullet. Enroute, the accused demanded and accepted Rs. 31,000/- as bribe from the complainant. Tr.Arulraj, Inspector of Fisheries, Gobi Chettipalayam, Erode District was arrested.